1990 மார்ச் 20]

கோவில்பட்டி பத்திரப்பதிவு சார்பதிவாளர் அலுவலகம்.

*6839 திரு. சோ. அழகர்சாமி:

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோவில்பட்டி பத்திரப்பதிவு சார் பதிவாளர் அலுவலகத்துடன் சேர்ந்திருந்த 8 கிராமங்கள் 1-9-1989-ல் புதிதாக துவக்கப்பட்டுள்ள கலிங்கப்பட்டி சார் பதிவாளர் அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதனால் அக்கிராம மக்களுக்கு ஏற்படும் சிரமத்தைப் போக்க மீண்டும் மேற்படி 8 கிராமங்களை கோவில்பட்டி சார் பதிவாளர் அலுவலகத்துடன் இணைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) 1-9-1989 முதல் கலிங்கப்பட்டி சார் பதிவகத்துடன் இணைத்து, 30-10-1989 முதல் மீண்டும் வடக்குப் பட்டி சிற்றூர் தவிர்த்து மற்ற 7 சிற்றூர்கள் கோவில்பட்டி சார் பதிவகத்துடன் இணைக்கப்பட்டன.

திரு.அழகர்சாமி அவர்கள் இப்போது இருக்கையில் இல்லை. இந்த கேள்விக்கு ஏற்கெனவே பதில் சொல்லியாயிற்று, அவரும் திருப்தி அடைந்தாயிற்று. எனவே நான் கருதுகிறேன். இது பழைய கேள்வி, இப்போது புது உருவில் வந்திருக்கிறது.

பிராட்கேஜ் ரயில்பாதை.

*3321 திரு. ஆச்சியூர் எம். மணி:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தூத்துக்குடியிலிருந்து நாங்குநேரிவரை பிராட்கேஜ் ரயில் பாதை அமைத்து நெல்லை—குமரி ரயில் பாதையுடன் இணைக்க மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

மடிப்பாக்கம்—தலைமைச் செயலகம் பேருந்து.

*6522 திரு. ப. காளியப்பன்:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;—